அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.308

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
24,ஒக்டோபர்,1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

மதுபோதை அல்லது மதுநாற்றம்

தாபனக் கோவையின் XLVII -ஆம் அத்தியாயத்தின் 2-ஆம் பிரிவில் பின்வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2:1 ஓர் உத்தியோகத்தர் கடமையில் இருக்கும் போது மதுபோதையில் அல்லது மதுநாற்றமுடையவராய்க் காணப்படுவது அவரை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தும்.

2:2 மதுபோதையில் இருக்கும் போது இழைத்த தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் உத்தியோகத்தர் நீதி மன்றத்தில் முதல் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

2:3 மதுபோதை அல்லது மதுநாற்றமுடைத் தவறு தொடர்பான திணைக்கள விசாரணை ஒன்றில் பதவிநிலை வரிசையிலுள்ள இரண்டு சிரேட்ட உத்தியோகத்தர்களின் சான்றுகள் ஓர் உத்தியோகத்தர் குற்றவாளி என்பதைத் தாபிப்பதற்குப் போதுமானவை. அவ்வாறு குற்றவாளியாகக் காணப்படும் ஓர் உத்தியோகத்தர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

02. கடமையிலிருந்து விடுபட்ட நிலையில் ஆனால் தத்தமது திணைக்களங்களின் கூட்டுத்தாபனங்களின் வளவுகளில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மேற்போந்த 2:3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பொருந்த வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.